விற்கு 16 உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க வேட்பாளர்கள் நியமனத் தாள்களை 7—4—1975 திங்கட்கிழமை, முற்பகல் 11 மணிக்குள் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். நியமனத்தாள் வேண்டுவோர் செயலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

நியமனத்தாள்கள், 7—4—1975 திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும். விலகிக்கொள்ள விரும்பும் வேட்பாளர்கள் 8—4—1975 செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணிக்குள் விலகிக்கொள்ளலாம்.

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்கள் எண்ணிக்கை நிரப்பப்பட வேண்டிய இடங்களின் எண்ணிக்கைக்கு, அதாவது பதினாறுக்கு மேற்படுமாயின் 10—4—1975 வியாழக்கிழமை முற்பகல் 9 மணிக்கும் பிற்பகல் 1 மணிக்கும் இடையே பேரவை குழுக்கள் கூடும் அறையில் (உறுப்பினர்கள் முன்னுள் ஓய்வறையில்) வாக்கெடுப்பு நடைபெறும்.

9. அரசினர் சட்ட முன்வடிவு.

தமிழ் நாடு, 1975 ஆம் ஆண்டு, நிதி ஒதுக்க (செலவினக் கணக்கின் மீது வாக்கெடுப்பு) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 10/75).

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

தமிழ் நாடு, "1975 ஆம் ஆண்டு, நிதி ஒதுக்க (செலவினக் கணக்கின் மீது வாக்கெடுப்பு) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 10/75) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென்று முன்மொழிகிறேன்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2, 3 ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன. பிரிவு 1, அட்டவணை, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இச் சட்டமுன்வடிவு சட்டமாக நிறைவேற்றப்படவேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, சட்டமுன்வடிவு சட்டமாக நிறைவேற்றப்பட்டது.